

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆர் கே பேட்டை வடக்கு ஒன்றியம் அம்மையார் குப்பம் கிராமத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கிளை நூலகம் கட்டிடத்தை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார், உடன் ஒன்றிய செயலாளர் சி.என்.சண்முகம், பா.சம்பத், வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் சி.எம். ரவி, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பள்ளி மாணவ – மாணவிகள் பலர் உள்ளனர்.

### திரு.வி.க.நகர் – இராயபுரம் மண்டலங்களில்

# ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்!



சென்னை, மார்ச்.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சிஎம்டிஏ சார்பில் கட்டுப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடம், மகளிர் உடற்பயிற்சிக் கூடம், பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் கொளத்தூர் நவீன அங்காடி கட்டடங்களின் இறுதிகட்டப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேற்று (05.03.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-64, சீனிவாசா நகர் சென்னை தொடக்கப் பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடம், பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் நவீன அங்காடி கட்டடம், வார்டு-68, ஜவஹர் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் மகளிர் உடற்பயிற்சிக் கூடம், வார்டு-70, ரமணா நகர், கௌதமபுரத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பல்நோக்கு மையக் கட்டடத்தில் கட்டப்பட்டு வரும் நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் இறுதிகட்டப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்கள் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை, ஆடுதொட்டி அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டுப் பூங்காவினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த விளையாட்டுப் பூங்காவில் நடைபாதை, கழிப்பறை, பாதுகாவலர் அறை, கேஜிபோ, திறந்த வெளி உடற்பயிற்சி, சிறுவர்கள் விளையாடும் பகுதி, மின்விளக்கு வசதி, மின்மாற்றிகளைச் சுற்றிலும் பாதுகாப்பு கட்டமைப்பு உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சிறுவர்கள் விளையாடுவதற்கு சாய்தள சறுக்கு விளையாட்டு, ஏற்ற விளையாட்டு, ஊஞ்சல், குடை இராட்டினம் உள்ளிட்ட உபகரணங்கள், Street Workout, Forearm Twirl, Chest Press, Shoulder Twirl, Cross Trainer, Core Twister, Leg Press, Pedaling Bicycle உள்ளிட்ட திறந்த வெளி உடற்பயிற்சி உபகரணங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பின்னர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-58, இராட்லர் தெருவில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் மூலதன நிதியில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் 595 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் பயிற்சி கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதில் உட்புற மற்றும் வெளிப்புற பயிற்சிக்கான கட்டமைப்புகள், பாதுகாவலர் அறை, அலுவலக அறை உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் சந்திரசேகர் சாகமூரி, வட்டார துணை ஆணையாளர்கள் எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (சிஎம்டிஏ) திருமதி மு. இந்துமதி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜன் பாபு, நியமனக் குழு உறுப்பினர் சொ. வெலு, மாமன்ற உறுப்பினர்கள் எ.நாகராஜன், திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீதர், மண்டல அலுவலர்கள் ஜி.சொக்கலிங்கம், சி.விஜயபாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஏ.வந்தேமாதரம் தலைமை! அய்யப்பன்தாங்கல் கிளைக் கழக துணைச் செயலாளர்

# ஆர்.எஸ்.சரண்ராஜ் மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துகிறார்!



காஞ்சிபுரம், மார்ச் 6-

சென்னை அய்யப்பன் தாங்கல், நினைவில் வாழும் எம்.ரவி -சரஸ்வதி ஆகியரின் புதல்வர் அய்யப்பன்தாங்கல் கிளைக் கழக துணைச் செயலாளர் ஆர்.எஸ்.சரண்ராஜ் - சென்னை புளியம்பாக்கம் ஜி.கல்யாணசுந்தரம் - மேகலா ஆகியோரின் புதல்வி கே.சுகாஷினி ஆகியோரின் மணவிழா வரவேற்பு இன்று 6.3.2026 வெள்ளிக்கிழமை மாலை 6:30 மணி அளவில் காட்டுப்பாக்கம் ஸ்ரீ லஷ்மி பிரசன்ன மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் வரவேற்புக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் தலைமை வகிக்கிறார். எஸ்.ராஜா தேசிங்கு வரவேற்கிறார்.

பி.பாபு, ஏ.சாந்தகுமார், சி.ரமேஷ், எஸ்.அன்பரசு, பி.மணிமாறன், ஏ.ஜி. அஜித்குமார், எஸ்.கல்வியரசன், எம்.மதனகோபால், ஏ.ரஞ்சித் குமார், எஸ். ஹரிஷ், ஜி,கார்த்திக், ஜி. மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., படப்பை ஆ. மனோகரன், எஸ்.எஸ். பாலாஜி எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் திருமுடிவாக்கம் ஏ.மணி, சரஸ்வதி மனோகர், உமா மகேஸ்வரி, வந்தே மாதரம், கே. எத்திராஜ், து.சுந்தர், பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.சந்தானம், எஸ்.கே. துளசிங்கம், பா.ராஜேந்திரன், தி.க. பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி, பெரியநாயகம், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சுலைமான், சையத் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், வேடங்கிநல்லூர் பகுதியில் ரூ.36 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வி.க. பேருந்து நிலையம் திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ஜே.என். சாலை பகுதியில் ரூ.4.6 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளியினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டு, பேருந்து சேவைகளை தொடங்கி வைத்து பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார் உடன் நகர்மன்ற தலைவர் திருமதி பா.உதயமலர் பாண்டியன், துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் தாமேதரன். போக்குவரத்துத்துறை பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன்,ஒன்றிய செயலாளர்கள் டி.மோதிலால், கூளூர் எம். ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம் மோ.ரமேஷ், பிரகாஷ்ஞானஒலி, தலைமை ஆசிரியர் முரளிதரன்,உதவி தலைமை ஆசிரியர் லட்சுமிமற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



பெரம்பூர் 46வது வட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றி கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்களுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பரிசுகள் வழங்கினார். இவ்விழாவிற்கு வட்டச் செயலாளர் வி.முருகன் தலைமை வகித்தார். பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் மற்றும் வி.வேதா, சி. ஆனந்தி, வை.கௌதமன், வெ.இன்பரசன், க.ஜெயராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜி.ஜெயக்குமார், ச.ராஜன், ஆர்.சீதா, ஆர். கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா, எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் வரவேற்புரையாற்றிட மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்ச்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் கே.பிரசாத் நன்றி கூறினார்.

### அடையாறு மண்டலத்தில் ரூ.71.12 இலட்சம் மதிப்பீட்டில்

# சிமெண்ட் கான்கிரீட் சாலை - எல்.இ.டி. தெரு மின்விளக்குகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!



சென்னை, மார்ச்.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (05.03.2026) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அடையாறு மண்டலம், வார்டு-172ல், மடுவின்கரை, மசூதி காலனி பகுதியில் மாநகராட்சியின் திருத்தம் மற்றும் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.65.29 இலட்சம் மதிப்பீட்டில் 510 மீ. நீளம் மற்றும் 2.40 மீ. அகலத்துடன் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் ரூ.5.86 இலட்சம் மதிப்பீட்டில் 15 எண்ணிக்கையில் ஆறு மீட்டர் உயரமுள்ள மின் கம்பங்களுடன் 48 வாட்ஸ் திறன் கொண்ட எல்.இ.டி. மின்விளக்குகள் என மொத்தம் ரூ.71.15 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

பின்னர், மடுவின்கரை, மசூதி காலனி பகுதி சாலை முன்பு இருந்த நிலை மற்றும் தற்போது நிலை குறித்த செயல்விளக்க வரைப்படத்தினைப் பார்வையிட்டு, 2 தெருகளிலும் நடந்து சென்று, சாலை வசதி மற்றும் மின்விளக்கு வசதி பார்வையிட்டு, பொதுமக்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் ஆர். துரைராஜ், மண்டல அலுவலர் சீ.செந்தில்குமரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை– தமிழன்பிரசன்னா பங்கேற்பு!

## மாவட்ட கழக பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!



திருவள்ளூர், மார்ச் 6-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாள் விழா முன்னொட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் உதவிகள் வழங்கும் விழா இன்று 06.03.2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் பொன்னேரி தொகுதி தச்சூர் கூட்டுச் சாலை பகுதியில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் எனது தலைமையில் நடைபெறுகிறது

இதில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் வே.ஆனந்த் குமார், நா. செல்வசேகரன், ஆ.ராஜா, மு.முரளிதரன், ஏ.ஆர். டி.உதயசூரியன் ஜி. ரவிக் குமார், கா.சு.ஜெகதீசன், பி.முத்து, க.சு.தமிழ் உதயன் ஆகியோர் வரவேற்புரையற்றிகிறார்கள்

மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி, வெங்கடாஜலபதி, பா.செ.குணசேகரன், பரிமளம்விஸ்வநாதன், ஏ.வி.ராம மூர்த்தி சி.ஜெ.ரமேஷ், ஜெ.மீனா, மு.யுவராஜ், ஆ. கௌரிசங்கர், ஜெ.சி.சந்திரன், கோ.சகாதேவன், எஸ். உமாபதி கே.சுந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு கழக சாதனைகளை சிறப்புரை யற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, இ.ஏ.பி.சிவாஜி, ஜெ.மூர்த்தி. மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், சுரேஷ் செல்வராஜ், வீ.கவி கணேசன், K.G.பாஸ்கர்சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி. ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ஜி.ராபர்ட்ராஜதுரை ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வேணுஆனந்த், ஆ.சத்தியவேலு, மு. மணிபாலன், ந.பரிமளம், அபிராமிகுமரவேல், இரா.அறிவழகன் மு.ஜான்(எ) பொன்னு சாமி, ருக்மணி மோகன்ராஜ், அப்துல் ரஷீத், சகிலா அறிவழகன், குமரவேல், ப.அலெக்சாண்டர் எம்.கேசவன் மற்றும்மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் புல்லரம்பாக்கம், தலக்காஞ்சேரி, ஈக்காடு கரிக்கலவாக்கம் ஆகிய பகுதிகளில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம் நெற்கலம் நிலையம், உதவி மருத்துவ கட்டுப்பாடு இயக்குனர் அறை, பகுதிநேர ரேஷன் கடை கட்டிடங்களை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு துவக்கி வைத்து இரண்டு புதிய சாலை அமைக்கும் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் டி.முரளிகிருஷ்ணன், உதவி இயக்குனர் மருத்துவ கட்டுப்பாட்டு அம்முகுட்டி, நிர்வாகிகள் டி.தென்னவன், பிராங்கிளின், விமலாகுமார், ஜி.பாஸ்கர், பி.கே.இ.கபிலன், டி.எம்.தமிழ் வாண்னன், லோகநாதன், சந்தோஷ், அப்புன்ராஜ், இளவழகன், குமார், கமல்தாசன், அன்புசெழியன், ஆர்.மனோகரன், முனுசாமி, ருக்மாங்கதன், சாந்தகுமார், சுப்பிரமணி, அபினேஷ், மோகன், டில்லிசங்கர், குகன், அஜீத் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி எழும்பூர் தெற்குப் பகுதி 108 வது வட்டச் செயலாளர் வான்மதி கதிரவன் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் வி. சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், பகுதி கழக அவைத் தலைவர் ரசூல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.